# பெற்றோர்களுக்கான தகவல்கள் - பேசுவதற்குப் பயிற்சி

அன்பான பெற்றோர்களே
**பிள்ளைகள் பாடசாலையில் ஒவ்வொரு நாள் காரியங்களிலும் சுறுசுறுப்பாக பங்குபற்றுவதற்கு முதல்த் தேவை ஒரு நல்ல பாஷை அறிவை பெறுவது. கீழே நாங்கள் உங்களுக்கு, எப்படி பாஷை பேசுவதற்கான பயிற்சி பாஷையை கற்பதில் பிரச்சனையுள்ள பிள்ளைகளுக்கும் இளவயதினருக்கும் அவர்கள் பேசுவதையும் அதோடு எழுதுவதையும் முன்னேற்றுவதற்கு உதவும், அவர்களுடைய தொடர்பு கொள்ளும் திறமையை விருத்தி செய்யும் மேலும் அவர்களுடைய தன்னம்பிக்கையையும் அதோடு அவர்களினுடைய தனிப்பட்ட முன்னேற்றத்தையும் பலப்படுத்தும் என்பதைப் பற்றித் தொரிவிப்போம்.**

## பேசுவதற்குப் பயிற்சி அளிப்பது என்றால் என்ன?

**பேசுவதற்கான பயிற்சி பாஷையை முன்னேற்றுவதற்கும் அதோடு தொடர்பை ஏற்படுத்துவதற்கும் உதவும். ஒரு பாஷை பழகுவதில் உள்ள பிரச்சனை வழக்கமாக படிப்பதற்கும்-, முன்னேறுவதற்கும்- அதோடு மற்றவர்களுடன் சேர்ந்து பழகுவதையும் பிரச்சனைக்கு கொண்டு போகும். இது அதிகமாக பள்ளிக்கூட பாடங்களில் முன்னேறுவதில் பாதிப்பை ஏற்படுத்தும், அவற்றில் பாஷையும் அதோடு பாஷையை விளங்குவதும் முக்கியம்.**

**பேசுவதற்குப் பயிற்சி அளிப்பவர் ஒரு சோதனை மூலம் பாஷை கற்பதில் உள்ள பிரச்சனைகளை கண்டுபிடித்து மேலும் தேவைப்பட்டால் தனிய- அல்லது கூட்டாக பயிற்சி அளிப்பார். பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் ஆலோசனை கூறுவது பேசுவதற்குப் பயிற்சி அளிப்பவரின் ஒரு முக்கியமான வேலை.**

**முன் ஏற்பாடாக பேசுவதற்குப் பயிற்சி அளிப்பவர்கள் பாஷை, பாஷை முன்னேற்றம் அதோடு தொடர்பை ஏற்படுத்தவது போன்றவற்றில் அவர்களுக்குத் தெரிந்த அறிவை வகுப்பில் கற்பிக்கும் போது சொல்லிக் கொடுப்பார்கள்.**

## யாருக்கு பேசுவதற்கான பயிற்சி தேவை?

**ஒரு பேசுவதற்கான பயிற்சி அளிப்பதற்கு தேவை ஒரு நிபுணர்கள் பரிசோதித்து தெளிவுபடுத்திக் கூற வேண்டும் அதோடு ஒரு மாணவி அல்லது ஒரு மாணவனுக்கு பாஷையைக் கற்பதிலும் மேலும் வார்த்தையைக் கூறுவதிலும், தொடர்பு கொள்வதிலும் அதோடு வாசிப்பதிலும் எழுதுவதிலும்**

பிரச்சனைகள் இருப்பது. ஒரு பிள்ளை - பல வேறுபட்ட காரணங்களினால் - நிறைய இடங்களிலே பாஷையில் பிரச்சனையைக் காட்டலாம்:
- பாஷையை விளங்குவது
- ஒன்றை சொல்லும் போது
- இலக்கணம்
- வார்த்தைகள்

அப்போ உதாரணமாக கீழ்வரும் பிரச்சனைகளைக் காட்டும்:
- தடங்கலின்றி பேசுவதில் பிரச்சனை (உதாரணமாக திக்கிப் பேசுவது)
- விழுங்குவதற்குப் பிரச்சனை
- குரலில் பிரச்சனை
- கதைக்கும் போது பிரச்சனை (உதாரணமாக ஒரு உச்சரிப்பை பிழையாக உபயோகிப்பது: /ஷ்/ இற்குப் பதிலாக /ஸ்/, பேசும் போது நாக்கு பற்களுக்கு இடையில் இருத்தல்)
- வாசிப்பதிலும்- எழுதுவதிலும் பிரச்சனைகள்

<u>பாடசாலை என்ன செய்யலாம்?</u>
ஒரு மாணவி அல்லது ஒரு மாணவனில் ஒரு பாஷை பிரச்சனையை கண்டால், பெற்றோரும் ஆசிரியரும் ஒரு பாடசாலை விவகாரங்கள் சம்மந்தமான பேச்சுவார்த்தையில் ஒரு பாஷை பேசுவதற்கான பயிற்சி தேவையா என பரிசோதித்து தெளிவுபடுத்துவதற்கு விண்ணப்பிப்பார்கள். இந்தத் தெளிவாக்கியதன் காரணமாகவும் அதோடு பெற்றோரின் அனுமதியோடும் பாடசாலை நிர்வாகம் தனிய- அல்லது கூட்டாக பயிற்சியை வகுப்பிற்கு வெளியே அல்லது வகுப்பிற்குள் சேர்த்து பயிற்சியை ஒரு பிள்ளைக்கு அல்லது இளவயதினருக்கு ஒழுங்கு செய்வார்கள். தேவைப்பட்டால் அதோடு பின்பு வரும் கேள்விகளுக்கு பாடசாலை மனோதத்துவ நிபுணரிடமும் கேட்கலாம்.

பேசுவதற்கான பயிற்சியில் பாஷையில் பிரச்சனையுள்ள பிள்ளைக்கு பயிற்சிகளை செய்து பழகுவதன் மூலம், விளையாடுகின்ற முறையையும் அதோடு பார்த்து உணர்ந்து அறிந்து கொள்ளும் பயிற்சிகளையும் ஊக்குவித்து அதோடு உதவி செய்வார்கள். அது அப்போ தெரியாதவற்றை சமாளிக்கவும், பாஷைத் திறமையை நன்றாக்கவும் அதோடு இருக்கின்ற பிரச்சனைகளை ஒரு சரியான முறையில் கையாளவும் முடியும்.

பேசுவதற்குப் பயிற்சி அளிப்பவர் உதவிசெய்யும் முயற்சியில் பெற்றோருடனும் ஆசிரியர்களுடனும் ஆலோசனை கூறுவதற்காக பேச்சு வார்த்தை நடாத்துவார், வகுப்பில் படிப்பிக்கும் போது போய்ப் பார்த்து மாணவிகளையும் மாணவர்களையும் அவதானிப்பார். இந்த முயற்சிகள் வருடத்திற்கு குறைந்தது ஒரு முறையாவது பாடசாலை விவகாரங்கள் சம்மந்தமான பேச்சுவார்த்தையின் போது சரிபார்க்கப்படும்.

பாஷையை எழுதுவது, கணக்கு போன்றவற்றை படிப்பதிலும்- அதோடு முன்னேறுவதிலும் உள்ள பிரச்சனைகளுக்கு ஆரம்ப காலத்திலேயே ஊக்குவிப்பதும் அதோடு முன் ஏற்பாடாகவும் பேசுவதற்குப் பயிற்சி அளிப்பவர் இடைக்கிடை வகுப்பிற்குள் சேர்த்தும் வேலை செய்வார் (முக்கியமாக கின்டர் காடனிலும்- அதோடு ஆரம்ப வகுப்புக்களிலும்) அதோடு ஆசிரியர்களுக்கு ஆலோசனையும் கூறுவார்.

தேவைப்பட்டால் தனியார் பாடசாலைக்குப் போகின்ற மாணவிகளுக்கும் மாணவர்களுக்கும் பேசுவதற்கான பயிற்சியை கோரலாம். பாடசாலை நிர்வாகம் பரிசோதித்து முடிவெடுக்கும் இடத்தையும், எடுக்கப் போகும் முயற்சிகளையும் அதோடு பயிற்சியளிக்கும் இடத்தையும் பற்றி தீர்மானிப்பார்கள்.

<u>பெற்றோர்கள் என்ன செய்யலாம்?</u>

பெற்றோர்கள் அவர்களினுடைய பிள்ளைகள் பாஷையில் முன்னேறுவதற்கு நிறைய உதவி செய்யலாம். எப்படி நீங்கள் பிள்ளைகளுக்கு அவர்களினுடைய பாஷையை முன்னேற்றுவதற்கு உதவி செய்யலாம் என்பதைப் பற்றி ஒரு சில தகவல்கள்:

- நீங்கள் வீட்டில் உங்களுடைய பிள்ளையுடன் பல விதமான விஷயங்களைப் பற்றி நிறையக் கதைக்கவும். இயலுமென்றால் எப்பொழுதும் உங்களுடைய தாயப்பாஷையில்.
- கதைக்கும் போது நீங்கள் பிள்ளையைப் பார்த்துக் கதைக்கவும். அப்படி நீங்கள் உங்களுடைய ஆர்வத்தை காட்டுவதோடு உங்களுக்கு அதை விளங்கிவிட்டது என்று உங்களுடைய பிள்ளைக்கு தெரியவைக்கின்றீர்கள்.
- பிள்ளைகள் மற்றப் பிள்ளைகளைப் பார்த்து பழகுவார்கள் - நீங்கள் ஒரே வயதுடைய பிள்ளைகளுடன் தொடர்பை ஊக்கிவையுங்கள்.
- சடங்குகள் மூலம் (இரவு படுக்கப் போகுமுன் சொல்லும் கதைகள், பாட்டுக்கள், செய்யுள்கள் போன்றவை) நீங்கள் உங்களுடைய பிள்ளைக்கு பாஷையை சொல்லிக் கொடுக்கலாம்.
- நீங்கள் உங்களுடைய பிள்ளையுடன் கதைக்கும் போது, தொடர்ச்சியாகக் கதைக்காமல் இடைநிறுத்திக் கதைக்கவும்.
- பேசும்போது மாறி மாறி செய்யவும்: ஒராளின் பின் மற்றவர் ஆக முறைப்படி.
- நீங்கள் உங்களுடைய பிள்ளை பேசும்போது அக்கறையாகக் கேட்கவும். இப்படி அனுபவப்படும், அது தன்னுடைய பேச்சில் ஏதாவது முன்னேறுவதற்கு.
- நீங்கள் புத்தகங்கள் வாசிப்பதை ஊக்குவிக்கவும்: நீங்கள் படங்களுடன் கூடிய புத்தகங்களை வாசித்துக் காட்டவும், புத்தகங்களை நீங்கள் பரிசளிக்கவும், உங்களுடைய பிள்ளையுடன்

நீங்கள் ஒழுங்காக நூல் நிலையத்திற்குச் செல்லவும். நீங்கள் வாசித்ததைப் பற்றிக் கதைக்கவும்.
- உங்களுடைய பிள்ளைக்கு பாடசாலையில் கொடுத்துவிடும் வீட்டு வேலைகளைச் செய்வதற்கு ஒரு அமைதியான இடம் இருக்கிறதா என்பதை நீங்கள் பார்த்துக் கொள்ளவும்.
- நீங்கள் உங்களுடைய பிள்ளைக்கு ஒரு முக்கியமான பின்பற்றத்தக்க உதாரணம் - வாசிக்கும் போதும், கேட்கும் போதும் ஒரு நல்ல பேச்சு முறையை கடைப்பிடிப்பது.

இப்போ ஒரு பிள்ளைக்கு, பேசுவதில் பிரச்சனை இருந்தால், அது முக்கியதாகத் தங்கியிருக்கிறது, அதற்கு அழுத்தம் கொடுக்காமல் இருப்பது. அது ஏதாவது சொல்ல விரும்பினால் அடிக்கடி திருத்தக் கூடாது.

நீங்கள் உங்களுடைய பிள்ளையின் ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு இந்தக் கேள்விகளையும் பிரச்சனைகளையும் கதைக்கவும்.

உங்களுடைய பார்வையில் நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்தால் அல்லது உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், நீங்கள் வகுப்பாசிரியரிடம் ஒரு பாடசாலை விவகாரங்கள் சம்மந்தமான பேச்சுவார்த்தை செய்வதற்கு கேட்கவும்.

<u>தகவல்கள் / ஆலோசனை</u>

பாஷையை முன்னேற்றுவது, பேசுவதில் பிரச்சனை சம்மந்தமாக விஷேஷ கேள்விகள் இருந்தால் நீங்கள் உங்களுடைய நகர சபையிலுள்ள பேசுவதற்குப் பயிற்சி அளிப்பவரை அனுகவும்.

மேலதிக தகவல்களை நீங்கள் கீழேயுள்ள இன்ரனெற் பக்கத்தில் காணலாம்:
- www.vsa.zh.ch (→ பாடசாலையின் செயல்ப்பாடுகளும் அதோடு கற்பித்தலும் → விஷேஷ கற்பிக்கும் முறை),
  ஆரம்பப் பாடசாலையின் உத்தியோக பூர்வமான தகவல்கள்
- www.sprachpraevention.ch
  பாஷையில் பிரச்சனை வராமல் தடுப்பதற்கான நற்பயன் அளிக்கக்கூடிய சிறந்த மையம், பாஷை பேசுவதற்கான பயிற்சிக்கு முன்னேற்பாடு செய்வதற்கான தொடர்பு-, தகவல்கள்- அதோடு கூடுமிடம்
- www.logopaedie.ch
  பெற்றோருக்கும் அதோடு வேறு பிள்ளையுடன் நெருங்கிய தொடர்புடையவர்களுக்கும் சுவிசிலுள்ள டொச் பாஷை பேசுவதற்குப் பயிற்சி அளிக்கும் சங்கத்திலுள்ள (DLV) தகவல்களும் அதோடு குறிப்புக்களும்
- www.lkg-zentrum.uzh.ch
  பிளவுபட்ட உதடுகள்-, தாடை (தாடை எலும்பு)-, அண்ணம்

**போன்றவற்றிற்கு சூரிச் பெரிய ஆஸ்பத்திரியில் (யூனிவேசிற்றேற்ஸ் ஆஸ்பத்திரி) உள்ள தகவல்கள்**

- **www.kindersprache.ch**
  **பிள்ளைகள் பாஷையைப் பழகுவதைப் பற்றிய தகவல்கள்**